## 11

### கன்னி

இதை வடசொல் என்று பார்ப்பனரும் அவர் அடிவருடிகளும் சொல்லுவார்கள். இது தூய தமிழ்ச் சொல்லென்றே அறியவேண்டும். கன்னி - இளமை, கன்னித்தமிழ் என்றால், இன்றும் இளமையோடு திகழும் தமிழ் என்பது பொருள். இது தூய தமிழ்ச்சொல் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

தொல்காப்பியம் நூன் மரபு 30ஆம் பாட்டு.

**"மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்**
**தம்முற் றாம்வரூஉம் ரழஅலங் கடையே"**

என்பது. இஃது என்ன சொல்லிற்றெனின் ர், ழ், என்னும் இரண்டு எழுத்துக்கள் தவிர மற்றைய எழுத்துக்கள் தம்முன் தாம் வரும் என்றது.

இதில் "ன்" என்பதன் முன் "ன" வருவதற்கு எடுத்துக்காட்டாகக் கன்னி என்ற தூய தமிழ்ச்சொல் காட்டப்பட்டிருக்கின்றது.

### காலம்

கால், காலை, காலம் ஒரு பொருட்சொற்கள். இது தூய தமிழ்ச் சொல்லே, எனினும் பார்ப்பனரும் பழிப்பனரும் இதையும் வடசொல் என்று ஏமாற்றுவர். இதனாலன்றோ தொல்காப்பியச் சொல்லதிகார உரைகாரர் "காலம் உலகம்" என்ற 58ஆம் நூற்பாவுரையில், காலம் உலகம் வடசொல்லன்று, ஆசிரியர் வடசொற்களை எடுத்தோதி இலக்கணங்கூறார் என்று விழிப்பூட்டினார்.

### உலகம்

இது லோகம் என்ற வடசொல்லின் சிதைவு என்று புகலும் பொய்யரும் உள்ளார் அன்றோ? மேலே காலம் என்பதன்கண் உரைத்த

தோல்காப்பியச் செய்யுள் உரையாய் இதுவும் தமிழ்ச் சொல் என்றே வற்புறுத்தியுள்ளார்.

உலகம் - உலகு என்றும் வரும். உலகத்தல் - துன்பம். துன்பம் நிறைந்ததாதலின் உலகம் காரணப்பெயர். இவ்வாறு மறைமலை யடிகளாரும் வரைந்தனர்.

## ஆகுலம்

இது வடமொழியன்று தூய தமிழ்ச் சொற்றொடர்; ஆகு x உலம் எனப் பிரியும். ஆகு-ஆகின்ற (ஒருவன் முயற்சியாலாகின்ற) உலம்-ஒலி. வினைத்தொகை நிலைத்தொடர். கடல் முதலியவற்றில் உண்டாகும் இயற்கை ஒலியைப் பிரித்தற்கு ஆகு என்ற அடை வேண்டிய தாயிற்று. உலம் என்பது உலம்பு என்றதன் கடைக்குறை என்பர். ஆகவே ஆகுலம் என்றது தூய தமிழ்ச் சொற்றொடர் என்க.

வியா கூலம் என்பது போன்ற சொற்கள் வடமொழியிற் கேட்கப் படுகின்றன. ஆயினும் அவற்றிற்கும் ஆகுலம் என்னும் இதற்கும் தொடர்பில்லை என அறிதல் வேண்டும்.

ஆகுலம் என்ற சொற்றொடரை வள்ளுவர் தாம் தக்க இடத்தில் வைத்து செய்யுள் செய்து காட்டியருளினார்.

**மனத்துக்கண் மாசு இலன்ஆதல் அனைத்து அறன்**
**ஆகுல நீர பிற.**

என்பது திருக்குறள். மனத்துக்கண் மாசற்ற நிலையில் உண்டாகும் நினைப்பும் செயலும் அறமாகும். அல்லாதவை அனைத்தும் அறமாகா. வேறு என்ன எனின் 'நான் அறம் செய்தேன், நான் அறம் செய்தேன்' என்று ஒலிபரப்புதலும் ஒலிபரப்பும்படி செய்தலும் ஆகிய தன்மை யுடையவைகளே என்பது இதன் கருத்து. ஈண்டு ஆகுலம் என்பது இன்றியமையாத சொற்றொடர் ஆதல் கண்டு இன்புறவேண்டும்.

- குயில், 12.8.1958

# 12

## சிவம்

இது தூய தமிழ்ச் சொல். செம்மை என்னும் மையீற்றுப் பண்புப் பெயரினின்று வந்த பெயர்ச்சொல். செம்மைப்பட்ட நிலை என்பது இதன் பொருள்.

செம்மை சிவம் ஆகுமா என்று கேட்பார் தமிழிலக்கணம் அறியாதாரும், பார்ப்பனரும், அவரடியாரும் ஆவார்.

அன்றியும், சைவத்தை வளர்ப்பதாகக் கூறி, மக்கட்பொதுப் பணத்தில் விழுந்து புரண்டுவரும் அறநிலையத் தலைவராகிய துறவிகள் சிலரும் சைவம் தமிழ்ச்சொல் அன்று என்று மறுத்துள்ளார்கள். அவ்வாறு மறுத்தவர்கள் காரணம் கூறி மறுத்தார்களா எனில் அதுதானில்லை. அவர்கள் எண்ணம் யாதெனில் வடமொழி ஒழிந்தால் சைவமே ஒழியுமே என்பதுதான். தமிழில் பற்றுள்ளவர்போல் நடிப்பார்கள் வேறு வழியின்மையால்.

மூன்றாண்டுகட்கு முன் மயிலத்து அறநிலையத்தின் ஒரு பகுதி பழுது பார்க்கப்பட வேண்டும் என்பதற்காக அவ் வறநிலையத் தலைவராகிய துறவியார் பொருளுதவி கோரி வேண்டுகோள் வெளி யிட்டார். அதில் அவர் தம் பெயரை வடவெழுத்தாலேயே பொறித் திருந்தார். இத் திருந்தாச் செயலுக்குக் காரணம் கேட்டாருக்கு அவர் அளித்த விடை என்ன தெரியுமா? நாம் தமிழில் கையொப்பம் இட மாட்டோம் என்பது. இந்தப் பாவி இன்றைக்கும் இப்படித்தானாம் - திருந்தவில்லையாம்; திருந்துகிற எண்ணமும் இல்லையாம்.

இந்த ஒழுங்கில் இவர் தமிழ்க் கல்லூரி நடத்துகிறார். இந்தக் கல்லூரி யில் பயிலும் மாணவர்கள் எவ்வாறு உருப்படுவார்களோ நாம் அறியோம். ஆயினும் அம் மாணவர்களுக்குத் தமிழ் ஆர்வத்தில் உயர்ந்து வரும் தமிழ்நாடு, விழிப்பூட்டி வருகின்றதென்றே எண்ணுகிறோம்.

செம்மை என்பதில் உள்ள மை ஈறுபோதல் என்ற சட்டத்தால் கெட்டது. முன்னிருந்த மெய்திரிதல் என்ற சட்டத்தால் செம், சிவ் ஆயிற்று, அம் என்ற பண்புப் பெயர் இறுதிநிலைபெற்று அந்தச் சிவ் என்பது சிவம் ஆயிற்று. அந்த சிவம் என்பதும் ஆகுபெயராய் செம்மையுற்ற ஒரு நன்னிலைக்கு ஆயிற்று என்க. செம்மை என்பது செம்மை நிறத்திற்கும் பெயர். செங்கால் நாரை என்பதிற் காண்க. செம்மை செவப்பு என்றும் சிவப்பு என்றும் வருவதும் இங்கு நோக்குக.

செம்மையின் வழித்தாகிய சிவம் என்பதை செம்மை நிலை என்ற பொருளில் அமைத்துத் தமிழ்ச் சான்றோர் செய்யுள் செய்தமையை நோக்குக!

"தவம்புரிந் தடங்கி நோற்கும்
தத்துவர்த் தலைப்பட் டோம்பிப்
பவம் பரிகெமக்கும் என்று
பணிந்து அவருவப்ப ஈமின்
அவம்புரிந்து உடம்பு நீங்காது
அருந்தவம் முயன்மின் யாரும்
சிவம்புரி நெறியைச் சேரச்
செப்பும்இப் பொருளும் கேண்மின்."

என்பது சீவக சீந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம் 605-ஆம் செய்யுள் ஆகும்.

இஃதேயுமன்றிச் சிவம் தூய தமிழ்ச் சொல்லே என்று அறுதியிட்டுக் கூறியருளிய மறைமலையடிகளாரின் கூற்றையும் கண்டு தெளிக.

இனி, சிவம் என்பது தமிழாயின் சைவம் எனத் திரியுமா என ஐயுறுவாரும் உளர். அவ்வாறு ஆரியர் திரித்தார்கள். சிவம் என்பதை அவர்கள் தமிழினின்று எடுத்துக் கொண்டார்கள். வந்தவர்களாகிய அவர்கள், வருமுன் சிவத்தையறிந்தாருமல்லர்; அப்பெயரைக் கேட்டாரு மல்லர். அவர்களின் - ஆரிய மறையே சிவத்தைக் கண்டதில்லையே!

- *குயில், 19.8.1958*

## 13

## சட்டச் சுவை

இதிலேயுள்ள சட்ட என்ற சொல் ஷட் என்ற வட சொல்லின் சிதைவென்று கூறி மகிழ்வார் பார்ப்பனரும், அவரடியாரும்.

இத்தொடரில் சுவை என்பதையும் ரசம் என்று மாற்றி ஷட்ரசம் என்பார்கள்.

சட்ட என்பது வடசொல்லா என்பது கேள்வி.

சட்ட என்பதைச் சிவஞான போத உரையாசிரியர் செம்மைப் பொருட்டாவதோர் அகர ஈற்றிடைச் சொல் என்று கூறியுள்ளதை முதலில் நினைவில் பதியவைத்துக்கொள்ளவேண்டும்.

சட்ட என்பதன் பொருள் சிறப்பு, செம்மை என்பனவாகும்.

சட்ட என்பது "பிட்டுநேர்பட" என்ற திருவாசகச் செய்யுளிலும், பிறவற்றிலும் வந்துள்ளது.

சுவை என்பது ஆகுபெயராகி உணவைக் குறிக்கும். எனவே சட்டச்சுவை, சிறப்புணவு என்பதாகும்.

திருமணம் முடிந்தவுடன் முதன் முதலாகத் தன் கணவனுக்கு மனைவி உணவு இடுவதை ஒரு சடங்காக வைத்துக் கொண்டனர் பார்ப்பனர். அவ்வாறு இடுவதற்கு அவர்கள் சட்டரசம் என்பார்களாம். இவ்வாறு கூறிய, விளம்பி ஆவணிக் கலைமகள் சட்டரசம் என்பதில் உள்ள சட்ட என்பது ஷட் என்ற வட சொல்லின் திரிபே சட்ட என்று கோணகோடு இழுக்கிறது.

சட்டச் சுவையைச் சட்டரசம் ஆக்கி, அதன் பின் ஷட் ரசம் ஆக்கிக் காட்டும் கலைமகளின் போக்கு மானமற்ற போக்கே என்க.

அது பொருள் கூறுகிறது ஷட் ரசத்துக்கு ஷட்ரசம் என்றால் அது சுவையாம்.

அறுசுவை என்று கூறிவிட்டால் சிறப்புணவைக் குறித்த தாகுமோ? உணவுக்கு அறுசுவை என்பது இயற்கை அடைமொழி என்பர். உணவில் அறுசுவைக்குத் தாழ்ந்த ஐஞ்சுவை நாற்சுவையும் உண்டோ?

ஷட்ரசம் என்பதற்கு அறுசுவையுணவு என்று கலைமகள் கொண்ட பொருள் சிறவாமை என்க.

சட்டச்சுவை, அல்லது சட்டரசம் என்பதில் உள்ள சட் என்பது தூய தமிழ்ச் சொல்லே என்க.

## செட்டி

இது ஸ்ரேஷ்டி என்ற வடசொல்லின் சிதைவாம்.

ஷ்டி சட்ட என்பது சகரம் தமிழில் மொழிக்கு முதலில் வரநேர்ந்த பின் தோன்றிய சொல். அதற்கு முன் இது செட்ட என்றே இருந்ததென அறிதல் வேண்டும். இந்த இடைச்சொல்லடியாகப் பிறந்ததே செட்டு, செட்டி என்பன. நடுவுநிலை என்பதுதான் இதன் வேர்ச் சொல்லின் பொருள்.

தமிழில் பண்டு தொட்டு வழங்கும் செட்டு, செட்ட, செட்டி முதலிய சொற்களைப் பிறமொழி மாந்தரும் எடுத்தாண்டார்கள். சேட் என்ற சொல்லையும் நோக்குக.

எனவே செட்டி தூய தமிழ்ச்சொல்லே!

**- குயில், 26.8.1958**

## 14

### முகம்

இது வட சொல் என்று வம்பு புரிந்தார்கள் பல்லாண்டுகளின் முன்! அப்போது இது தூய தமிழ்ச் சொல்லே என்று பேராசிரியர் கா.சுப்பிரமணியப் பிள்ளை எம்.ஏ. எம்.எல். முதலியவர்கள் எடுத்துக்காட்டி மறுத்தார்கள். ஆயினும் ஏமாற்றும் பார்ப்பனரும், ஏமாறும் தமிழரும் மலிந்து வரும் இந்நாளில் மீண்டும் அதுபற்றி ஆராய்வது பொருத்தமேயாகும்.

முன் என்பதன் திரிபே முகம். எனவே முகம் என்பதற்கு முன் என்பதே பொருள் என்க. முகம் என்ற இச்சொல், நூற்றுக்கணக்கான தமிழ்ச்சொற்களின் உள்ளுறுப்பாகவே அமைந்திருப்பதும், பழங்காலந் தொட்டே அமைந்திருப்பதும் நோக்கற் பாலன.

முகமன் - முன், சிறப்புக் கூறல். முகப்பு - ஆசை, வீடு இவற்றின் முன்னுறுப்பு. முகசு, முகசம், முன்னே சிறந்து காணப்படும் பல். முகதா - முன்னிலை. முகருதல் - முன்னாலிருந்து மணத்தை உட்கொள்ளல், முகவணை- முகவுரை முன்னால் உரைக்கும் உரை. இதை வடவர் எடுத்தாண்டார்கள் வழியின்மையால் போலும்.

எனவே, முகம் தூய தமிழ்ச் சொல் என்று முடிக்க.

### காரணம்

இது தமிழ்ச் சொற்றொடர்

கருமை+அணம்=காரணம் ஆயிற்று. மையீறு போதலும் ருகரத்தின் மேலுள்ள உகரம் போதலும், முதல் நீளலும் தமிழிலக்கணச் சட்டம்.

எனவே, கார் + அணம் = காரணம் ஆயிற்று. கருமையின் வேற்றுமையான் உற்ற கார் என்பதற்குப் பொருள் முதன்மை. அணம் அணுவுவது - அஃதாவது நெருங்குவது, முதன்மையை நெருங்குவது என்ற பொருளில் அமைந்ததாகும்.

## காரியம்

கார் + இயம் = காரியம். கார் முதன்மை. இயன்றது என்பது இயம் என வேறுபாடுற்றது. காரணத்தால் இயன்றது காரியம் என்க. காரணமே காரியம் என்னும் கபிலர் எண்ணூலையும் எண்ணுக.

காரியம் தூயதமிழ்ச் சொற்றொடர். காரணம் காரியம் இரண்டையும் வடமொழியாளர்கள் எடுத்தாண்டார்கள் வேறு வழியின்மையால்.

## கடிகை

இது கடிகா என்ற வடசொல்லின் சிதைவாம். இவ்வாறு கூறுவார் பார்ப்பனரும் ஏய்ப்பனரும்.

கடி என்பதற்கு எத்தனை பொருள்கள் உண்டு?

கடி-வியப்பு, அளர், அச்சம், அழகு, இடுப்பு, இரப்போர் கலம், இன்பம், சினப்பு, ஐயம், ஒழிக்கை, ஒளி, ஓசை கடிதழும்பு, கரிப்பு, திருமணம், களிப்பு, கால நுட்பம், காலம், காவல், கூர்மை, கைப்பற்றல், சிறப்பு, சிறுகொடி, விரைவு, ஓசை, பூங்கா, நீக்கல், பேய், பிணம், புணர்ப்பு, புதுமை, பொழுது, மிகுதி, மணம், விளக்கம்.

இங்குக் கடி என்பது கால நுட்பத்துக்கானது. கடி வினைத் தன்மையடைந்து கைத் தொழிற் பெயர் இறுதி நிலை பெற்றது. நாழிகை என்பது பொருள். எனவே கடிகை வடசொல் என்பது கரடி. அது தூய தமிழ்ச் சொல்லே.

## கடிகாரம்

இது கடிகா யந்திரம் என்பதின் திரிபென்று கதைப்பர். கடிகை ஆர்வது – காட்டுவது – ஈற்று திரிவுற்றது. எனவே கடிகாரம் தூய தமிழ்ச் சொல்லே.

- குயில், 2.9.1958

# 15

## கற்பனை

இது கல்பனா என்ற வட சொல்லின் சிதைவு என்பார் வடவர். ஆம் என்பார் தமிழறியாத தமிழர் சிலர்.

கற்பனை, கல்பனாவின் சிதைவு என்பவர், விற்பனையை வில்பனா என்பதன் சிதைவு என்பார் போலும். நகைப்புக் கிடமாகிறது.

கல்+பு=கற்பு. அனைத்துமோர் முதல்நிலை என்க. இது கற்பனையின் முதனிலையாயிற்று. கற்பு+அன்+ஐ=கற்பனை என்க. அன் சாரியை. ஐ தொழிற் பெயர் இறுதி நிலை.

முதனிலையாகிய கற்பு என்பதன் பொருள் தோண்டுதல் என்பது. ஆகுபெயராய் தோண்டுதலின் பயன், எண்ணத்தின் ஊற்று, புதுப்புது கருத்துக்கள் என்க. எனவே கற்பனை தூய தமிழ்ச் சொல் என்பது வெட்ட வெளிச்சம்.

கல்பனா என்பதொரு சொல் வடமொழியில் இருக்கலாம். அது தமிழில் கற்பனை என்றுதான் திரிக்கப்படும். திரிக்கப்படவே, நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன? வடவர் சொல்லும் கற்பனைக்கும், தூய தமிழ்ச் சொல்லாகிய கற்பனைக்கும் தொடர்பில்லை என்பதாகும்.

அன்றித் தமிழின் கற்பனையையே வடவர் எடுத்தாண்டார்கள். எனினும் பொருந்துவதே. இந்த உலகில் சமக்கிருதம், தமிழுக்குப் பிந்தியது என்பதும், சமத்கிருதக்காரர் தமிழர்க்குப் பிந்திய நாகரிகம் உடையவர்கள் என்பதும் மறத்தற்குரியன அல்ல.

## வடிவு

இது அம் சாரியை பெற்று வடிவம் என்றும் வரும். இச்சொல் வடசொல் என்று ஏமாற்ற வருவர்; ஏமாறற்க.

வார்ப்படக்காரர் தொழிலிடத்தினின்று தோன்றிய பெயர்களில் ஒன்று. வடி+வு=வடிவு தொழிற்பெயர். தொழிலாகு பெயராக வடிவு

செய்தலால் வரும் வடிவத்துக் காயிற்று. செம்பு முதலியவைகளைக் காய்ச்சி அச்சில் கசடு நீங்க வடித்தூற்றுதலின் ஆகும் வடிவம் எனக் காரணப் பெயராதல் காண்க. வார்ப்படம் என்பதும் இதே பொருளில் அமைந்த காரணப் பெயரே என ஒப்பு நோக்கித் தெளிக!

## படிவு

இதுவும் அம் சாரியை பெற்றுப் படிவம் எனவரும். இதையும் வடசொல் எனக் கதைப்பாரும் உளர்.

படிவு, படிதல் என்ற பொருளுடைய தொழிற் பெயரே இதுவும். அச்சுக்குப் பெயர். அச்சிற் படிவு செய்யப்பெற்ற வடிவப் பொருளுக்கு ஆகு பெயர்.

படிமம் - வடிவம், படிவம் ஆயினவெனக் கூறுவர் ஏமாற்றுக் காரர்கள். அதற்கு ஒத்து ஊதுவார்கள் மீனாக்கி அழகு, சேது ஆகிய பிள்ளைகள், படிவு தூய தமிழ்க் காரணப் பெயர் என முடிக்க.

- **குயில், 9.9.1958**

# 16

## தாரம்

"தாரம், அரும்பண்டம், வெள்ளி, அதன் ஒளி, சேரும் ஏழ் நரம்பில் ஓர் நரம்பும் செப்பும்" என்பது திவாகரம். இதில் தாரம் என்பதற்கு நான்கு பொருள் காணப்படுவதைக் காண்க.

**"வல்லிசைப் பெயரும், வாழ்க்கைத் துணைவியும்,**
**யாழின் நரம்பும், அரும்பண்டமும் வெண்தாதும்**
**தராவும், நாவும், தாரம் என்ப"**

என்பது பிங்கலந்தை. இதில் தாரம் என்பதற்கு, ஏழு பொருள் காணப்படுவது காண்க.

**"தாரம், வல்லிசை, நா, வெள்ளி**
**தலைவி, ஓரிசை, கண், என்ப."**

என்பது சூடாமணி நிகண்டு. இதில் கண் என்பதும் குறிக்கப்படுவதைக் காண்க!

தாரம் என்ற இச் சொல் வடமொழியே என்று சொல்லுகின்றவர்கள் அதற்கு எடுத்துக்காட்டாக என்ன சொல்லுகின்றார்கள் எனில், தாரம் ஏழிசையின் ஒன்று என்ற பொருள் வடமொழியில்தான் உண்டு என்கின்றார்கள். அரும்பண்டம் முதலிய பொருள் தரும்போது அது தமிழ்ச் சொல்லே என்பதை அவர்களே ஒத்துக்கொள்கின்றனர்.

நாம் கேட்கின்றோம், ஏழிசையில் ஒன்றைக் குறிக்கின்றபோது அது வடசொல் என்றால், ஏழிசை வடவர்க்கு எப்போது எங்கிருந்து கிடைத்தது? - ஏழிசை தமிழரிடமிருந்து வடவர் எடுத்தனர் என்பதை மறுக்கக் கூடியதா? இல்லவே இல்லை. ஆதலின் ஏழிசையின் ஒன்றுக்கு அமைந்த தாரம் என்பதையும் வடவர் தமிழினின்றே எடுத்தனர் அல்லவோ?

இனி,

அரும்பண்டம், ஏழிசையின் ஒன்று ஆகிய இரு பொருளிலும் வரும் தாரம் செந்தமிழ்ச் செல்வமே. ஆனால் நிகண்டு, பிங்கலம் முதலியவற்றில் பிற பொருளில் வரும் தாரம் என்ன மொழி? எனில், கூறுவோம்.

தாரம் என்பதை வடவர், வல்லோசையானும் மெல்லோசை யானும் சொல்லிக் கொண்டனர். ஆயினும் முதல் தாரம் என்பது தான் அது ஆகுபெயர் முதலிய சார்புப் பொருள் பெற்று வந்திருக்கலாம். அவையும் தமிழரால் வந்தனவே என்று உணர்தல் வேண்டும்.

எனவே, தாரம் என்பது தூய தமிழ்ச் சொல் என முடிக்க.

இனியும் இசை இலக்கணம் தமிழினின்றே வடவர் எடுத்தார்கள் என்பதற்குச் சில எடுத்துக் காட்டுகள் வருமாறு:-

1. இன்றைக்கு ஆயிரத்து நானூறு யாண்டின் முன் வடமொழியில் இசை நூல் இயற்றிய பரதரும், அறுநூற்றெண்பது யாண்டின் முன் இசைநூல் இயற்றிய சாரங்க தேவரும், தமிழிசையிலிருந்து எடுத்தே வடமொழிக்கண் இசை வகுக்கப்பட்டது எனக் கூறினார் என்பர், இவ்வாராய்ச்சிவல்ல விருதைச் சிவஞான யோகிகள்.

2. இசைத் தமிழிலிருந்தே எல்லா இசைவகைகளும் வடமொழிக் கண் சென்ற உண்மை, ஆபிரகாம் பண்டிதர் மிக விரிவாக இயற்றி வெளியிட்ட கருணாமிர்த சாகரம் என்னும் இசைத் தமிழ் நூலில் நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது.

**- குயில், 16.9.1958**

## 17

### ஓரை

இது தூய தமிழ்ச் சொல். இராசிகளின் பொதுப் பெயர். ஆனால் வடமொழி நூலுள்ளும், கிரேக்க மொழியுள்ளும் காணப்படுதலின், வடமொழியே என்று புகலுவார். அதற்குக் காரணம் இரண்டு: தமிழரை ஏமாற்றி விடலாம் என்று அவர்கள் நினைப்பதொன்று. ஆராய்ச்சி யில்லாமை மற்றொன்று.

தொல்காப்பியத்துக் களவியல் 44-ம் நூற்பாவாகிய

"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்"

என்பதன்கண் காணப்படும் ஓரை என்னும் சொல்லைக் கிரேக்க மொழி எனக் கொண்டு, அவ்வாற்றால் தொல்காப்பிய காலத்தையே கி.மு. மூன்றாம் நூற்றாண்டென்று கூறி மகிழ்ந்து கொள்ளும் பகைவரும் உண்டு.

இதையே சிலர் வடசொல் என்று கூறிக் கொக்கரிப்பார்கள்.

ஓரை என்னும் இதுமட்டுமன்று; ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்களையும் வடசொல் என்றே ஏமாற்றித் திரிவார்கள். அவர்கள் யார்? தமிழ் மொழி கொண்டு தம் மொழி பெருக்கிய மொழிவெறியர்.

தொல்காப்பியத்துக்கு முற்பட்ட காலத்திலேயே ஓரை என்னும் சொல் வடமொழியிலேனும் கிரேக்க மொழியிலேனும் வழங்கப்பட்டிருக்கு மாயின் அது அப்பிறமொழிச் சொல் எனலாம். காட்டட்டுமே!

மறைமலையடிகளார் கூறுகின்றார்; யாம் ஆராய்ந்த மட்டில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலாதலால் அதற்கு முற்பட்ட காலத்திலாதல் இயற்றப்பட்ட கிரேக்க ஆரிய நூற்களில் ஓரை என்னும் சொல் வழங்குதலைக் காணேம்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இருந்த வராகமிகிரரால், கிரேக்கரின் வானநூல் ஆராய்ச்சியைத் தழுவி ஹோரா சாத்திரம் என்னும் ஒரு நூல் வடமொழியில் எழுதப் பட்டிருக்கின்றது. அதுகொண்டு ஹோரா

என்னும் சொல் கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குச் சிறிது முற்பட்ட காலத்தில் கிரேக்க மொழியில் வழங்கப்படாமை மட்டும் அறியப்படும்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கிரேக்க ஆசிரியரான "ஹிப்பார்க்கஸ்" காலத்திலேதான், கிரேக்கரின், வான் நூலாராய்ச்சி ஓர் ஒழுங்கு பெறத் தொடங்கியது. அதன் பின் அது தாலமி என்பவரால் முற்றுப் பெறலாயிற்று.

ஆகவே கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில்தான் ஹோரா என்னும் சொல் கிரேக்க மொழியில் வழங்கப்பட்டதாகிறது. அவ்வாறாகவே கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்குமுன் கிரேக்க மொழியில் வழங்காத ஓரை என்னும் சொல்லை அக்கிரேக்க மொழிக்கே உரியதென்பது பொருந்துமா? கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகிய தொல்காப்பியத்தை அந்நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகிய அச்சொற்கொண்டு கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகும் என்றல் பொருந்துமா?

மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியத்தில் ஓரை காணப்படு கின்றது. அக்காலத்தில் ஏற்பட்ட கிரேக்க, வடமொழி நூல்களில் ஓரை காணப்படவில்லை.

தொல்காப்பியத்திற்கு மூவாயிரத்து ஐந்நூறாண்டுகட்குப் பிற்பட்ட - அதாவது கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்துண்டான கிரேக்க - ஆரிய நூல்களில் மட்டும் ஓரை காணப்படுகின்றது.

இந்தக் காரணங்களால் ஓரை தூய பழைய தமிழ்ச் சொல்லே என உணர்ந்துகொள்க.

## சரி

இது இன்றும் தமிழ்நாட்டிற் பல பாங்கிலும் செறி என்று பேசப்படுகின்றது. நினைவு கொள்க.

செறிவு என்பதன் முதனிலையே செறி. பொருத்தம் என்பதே இதன் பொருள். செறி என்பதுதான் சரி என மருவிற்று. ஆதலின் சரி என்பது தூய தமிழ்ச் சொல் என்று கடைப்பிடிக்க.

**- குயில், 23.9.1958**

## 18

## பரதர், பாரதர், பாரதம், பரதன்

இந் நான்கு சொற்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இவை தூய தமிழ்ச் சொற்களேயாதல் இங்கு விரித்துரைக்கப்படும்.

தொல்காப்பியம் அகத்திணை இயல் 20ஆம் நூற்பாவின் உரையின் பகுதி வருமாறு:-

நால்வகை நிலத்தும் மருவிய குலப் பெயர் ஆவன:

முல்லைக்குக் கோவலர், இடையர், ஆயர், பொதுவர், இடைத்தியர், கோவித்தியர், ஆயத்தியர், பொதுவியர்.

நெய்தற்கு நுளையர், திமிலர், **பரதவர்**, நுளைத்தியர், பரத்தியர்.

இதனால் நாம் அறிய வேண்டுவது என்னவெனில் பரதவர் அஃதாவது பரதர் என்ற பெயர் தொல்காப்பியர் காலத்திலேயே, தமிழில் வழங்கியது என்பதாகும்.

**"மீனெறி பரதவர் மடமகள்**
**மானேர் நோக்கம் காணா ஊங்கே"**

என்ற நற்றிணையிலும் காண்க.

இதில் வரும் பரதவர்தானா பரதர் எனின் ஆம் என்க. பரதர் என்பதன் பெண்பால் பரத்தியர் என வருதலை நோக்குக.

இனி, பரதர் என்று தமிழ் நூலில் வரும் பெயர்தான் பரதர் - பரதன், பாரதர், பாரதம் என வந்ததா எனின் ஆம் ஆம் என்று கூறி, மறைமலையடிகளார் சொல்லியருளிய விளக்கத்தையும் இங்கு சுருக்கி எழுதுவோம்.

'தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம்' என்ற திருமந்திரச் செய்யுள் - பஞ்ச திராவிடராகிய தமிழரின் மேம்பாட்டைக் குறிக்கின்றது. இத் தமிழர் தாம், முதன் முதலில் கடவுளைத் தீ வடிவில் வைத்து வழிபடலாயினர். இவ் வைவகைத் தமிழ் மரபினர்க்கும்

தலைவராயிருந்து அந்நாளில், அரசு புரிந்த பரதன் என்னும் தமிழ் வேந்தன் வழியில் வந்தவர் பரதர்கள் என்று சொல்லப்பட்டனர்.

பாரத மரபினரான தேவசிரவர், தேவவாதர் என்னும் இருவரும் பயன்மிகுந்த தீயை மிக்க வலிமையோடும் தேய்த்து உயிர்ப்பித்தனர். (இருக்கு 3-23-2)

"ஓ நெருப்பே, வலிய படைவீரர்களுடைய பழைய பரதர்கள் தமக்குப் பேரின்பம் வேண்டி நின்னையே இரந்தனர்." (இருக்கு 6-16-4)

இவ்வாறு இருக்குமறையில் பல இடத்தும் காணப்படுகின்றது. இதனால் தமிழ் மக்கட்குத் தலைவரான பரதர்களே முதன் முதலில் தீ யெழுப்பினர், தீயின் பயன் கண்டனர். தீயே கடவுள் என்று வழிபட்டனர் என்று அறிய வேண்டும்.

தீயைப் பரதன் என்று சொல்லுகிறது இருக்குமறை இரண்டாம் மண்டிலத்து ஏழாம் பதிகம்!

அன்றியும் செந்நிறக் கடவுள் என்ற காரணப் பெயரான உருத்திரன் என்ற தமிழ் பெயருடைய கடவுளுக்கும், பரதன் என்று பெயரிட்டழைக்கின்றது. ஷை இரண்டாம் மண்டிலத்து முப்பத்தாறாம் பதிகம்.

தென்னாட்டவர் கண்டறிந்தது தீக்கடவுள் என்பதனாலன்றோ வடநூல்களில் நெருப்புக்குத் தென்றிசையங்கி - தக்ஷிணாக்கினி என்று சொல்லப்படுகின்றது.

இங்ஙனமாக இறைவனை நெருப்பொளியில் வைத்து வழிபடும் முறையை உணர்ந்த பரதர், பண்டை நாளில், இந்த நாவலந்தீவு முழுதும் ஒருங்கு செங்கோல் ஓச்சினராதலின், அவர் பெயரால் அது (இந்தியா) பரத கண்டம் எனப் பெயர் பெறுவதாயிற்று. இப் பரதர்கள் முதன் முதல் கடல் சார்ந்த நெய்தல் நிலத்தின்கண் இருந்து, அதன் கண் பட்டினங்கள் அமைத்து நாகரிகத்திற் சிறந்து வாழ்ந்தாராதலின் அந்த நெய்தல் நிலத்து மக்கள் பரதர், பரத்தியர் எனப் பெயர் பெறலாயினர்.

வடக்கிருந்து வந்து இந்திய நாட்டின் வடமேற்கு எல்லையில் குடியேறிய ஆரியர், நாகரிகம் இல்லாதவராய் உயிர்க்கொலை புரிந்து வரைதுறையின்றி ஊனுண்டும் கட்குடித்தும் மகளிர்ப் புணர்ந்தும் தமிழர் அருவருக்குமாறு ஒழுகினமையால் அவர்களை இந்நாட்டில்

நுழையாதபடி அக்காலத்தில், எதிர்த்து நிறுத்தினர், என்று இருக்கு மூன்றாம் மண்டிலத்து 33-ம் பதிகம் கூறுகின்றது.

இன்னும் இதை விவரிக்க வேண்டாம். இங்குக் கூறியவற்றால் அறியலானவை எவை?

ஆரியர் வருமுன்னரே தமிழர் நல்ல நாகரிகத்துடன் இந் நாவலந் தீவில் எங்கணும் பரவி இருந்தனர். அக்கால், தமிழே இருந்தது. அக்கால் தமிழ்ப் பெயர்களே எப்பொருட்கும் அமைந்திருந்தன. இன்றும் பண்டைய நூல்களில் காணப்படும் பரதர், என்பதே அக்காலத்தில் பரதன், பாரதன், பாரதம், பரதகண்டம் என விரிந்தது. பரதர், பரதவர் முதலிய அனைத்தும் தூய தமிழ்ச் சொற்களே என்பனவாம்.

பரதகண்டம் என்பதில் கண்டம் தமிழா என ஐயுற வேண்டாம். கண்டம் தூய தமிழ்ச் சொல்லே. அஃதேயுமன்றி **காண்டம்** என்பதும் தூய தமிழ்ச் சொல்லே. கண்டம், காண்டம் என்பன பிரிவு என்பது. கண்டம் நிலப்பிரிவு. காண்டம் நூற்பிரிவு என்க.

**- குயில், 30.9.1958**

CENTER FOR BHARATHIDA...
005331
LIBRARY
BHARATHIDASAN UNIVERS...

# 19

## தாசர்

தாஸ என்று வடமொழியில் சொல்லப்படினும் இது வடமொழி யன்று. தாஹி என்று பார்சி மொழியில் வழங்குவதால் இது பார்சி மொழியாகிவிடாது.

தாதர் என்ற தூய தமிழ்ச்சொல்லையே ஏறத்தாழ 5000 ஆண்டு களுக்கு முன் - அதாவது ஆரியர் நாவலந் தீவில் நுழையுமுன் - வடவராலும், பார்சிக்காரராலும் தாஸ, தாஹி என எடுத்தாளப்பட்டது என அறிதல் வேண்டும்.

தாத்தல் - கொடுத்தல். இது தாத்து என்று இன்றும் வழங்குகிறது. அன்றியும் தாதம் என்றும் கொடுத்தல் என்ற பொருளில் வழங்குகிறது. இதன் முதனிலை தா என்பது காண்க. தா-கொடு. தாத்தல், தாத்து, தாதம், கொடுத்தல் கொடை என்க.

எனில், தாசர் என்ற சொல்லுக்குக் கொடையாளிகள், வள்ளல்கள் என்று பொருளா என்று கேட்போரை நாம் வேறென்னதான் என்று கேட்கின்றோம்.

தாசர் என்றால் அடிமைகள் என்பதல்லவா பொருள் எனில், அது பின்னாளில் என்றும் எடுத்துக்காட்ட நம்மால் முடியும். ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டவர்கள், தமிழ்ச் சொல் ஒவ்வொன்றையுமே தலைகீழாக்கி வைத்தார்கள். அவர்களின் ஏமாற்று - விழிப்புற்ற - ஆராய்ச்சி மிக்க இக் காலத்திலும் செல்லுமோ!

ஆரியர் - மிலேச்சர் என்பது பிங்கலந்தை. அதை அநாரியர் - மிலேச்சர் என்று இதே நூற்றாண்டில் உ.வே. சாமிநாத ஐயர் முயற்சியால் அகரவரிசை நூல் ஒன்றும் வெளிவந்திருப்பதை நாம் கண்டோம் அல்லோமோ? இருபது ஆண்டுகளின் நிலையே இப்படியானால், ஆயிரக் கணக்கான ஆண்டுகளின் முன்னிருந்த நிலைமை எவ்வாறு தலைகீழாக்கப் பட்டிருக்கும்.

பாலிமொழி ஆராய்ச்சியில் உலகப் புகழ் வாய்ந்த தருமானந்த கோசம்பி தம் "பகவான் புத்தர்" என்ற நூலில் அடியில் வருமாறு கூறுகின்றார்:-

ஆரியர் வருமுன்பு சிந்து பஞ்சாப் பெருமாவட்டங்களில் தாசர்களின் ஆட்சி நிலவியிருந்தது. இப்போதுதான் தாசன் என்ற சொல்லுக்கு அடிமை என்று பொருள் ஆக்கி வைத்திருக்கிறார்கள். ஆனால், ஆரிய மறையில், தாஸ, தாச் என்ற இரண்டு வினைப் பகுதிகளுக்குக் கொடுத்தல் என்ற பொருளே அமைந்திருக்கின்றது. அண்மையில் வெளிவந்த அகரவரிசை நூல்களிலும் கொடுத்தல் என்ற பொருளிலேயே தாஸ, தாச் என்ற சொற்கள் அமைந்துள்ளன. எனவே தாசன் என்ற சொல்லுக்கு முதலில் உண்டான பொருள்கள் கொடை வள்ளல்; நாவலந்தீவின் உயர்குடித் தோன்றல்! என்பனவேயாகும். ஆவெஸ்தா வில் பர்வதின்யஸ்து என்ற வட்டாரத்தில் தாச நாட்டு பிதிரர்கள் வழிபாடு பற்றிய செய்தி வருகின்றது. அதில் அவர்களை "தாஹி" என்று குறித்துள்ளார்கள்:-

தாஸ, தாச் என்ற தமிழ்ச் சொற்களை ஆரிய மறை எடுத்தாண்டதும் இங்கு நோக்கத்தக்கது.

தாசன் - தமிழ்ச் சொல்லே என அறுதியிட்டுக் கூறுக!

- **குயில், 7.10.1958**

## 20

## வித்தகம்

இது தூய தமிழ்ச் சொற்றொடர். இரு சொற்களால் அமைந்தது. வித்து + அகம்.

வித்தகம் என்பது பழந்தமிழ் நூற்களில் பல்லிடத்தும் எடுத்தாளப் பட்டிருக்கின்றது.

"நத்தம்போற் கேடும், உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது." - *திருக்குறள்*

வித்தகப் பெண்பிள்ளை நங்காய். - *ஔவையார்*

முதலியவை காண்க.

வித்து எனில் முதன்மை: காரணம். அகம் எனில் மனம். எனவே வித்தகம் (வெற்றிக்குக்) காரணமாகிய மனம்; ஆற்றல்! அவ்வாற்றலும் தோல்வியடையாத ஆற்றல் ஆகும். மேற்படி குறளில் வரும் வித்தகர் என்பதற்கு பரிமேலழகரும் சதுரப்பாடு உடையவர் என்று பொருள் கூறினார். சதுரப்பாடு - ஆற்றல்.

வித்தகம் என்னும் இது, நாளடைவில் வித்துக்கும் வழங்க லாயிற்று. அதன் அருமை காட்ட உழவர்கள் வித்து என்ற சொல்லை வித்தகம் என்றே சொல்வதுண்டு. மணிமேகலையில் பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை 227-ம் அடி.

"நெல்வித் தகத்துள் நெல்முளை தோற்றும்"

என்பது.

வித்தகம் தமிழ்ச் சொற்றொடர் என்பதில் ஐயப்பாடு அடையக் காரணமே இல்லையாகவும், தமிழ் மாணவர் நலம் கருதி நாம் இதற்கு விளக்கம் தர முன் வந்தோம், இது வடசொல் என்று ஒரு நண்பர் சொன்னதால்.

- **குயில், 14.10.1958**